# மன்னார் பிரதேச சபை
# மன்னார் மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2011 ஏப்ரல் 12 ஆந் திகதியே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2010 ஏப்ரல் 26 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய மன்னார் பிரதேச சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களைப் பராமரித்து வந்திருந்தது என்றும், இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி மன்னார் பிரதேச சபையின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாக நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்குகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| | செலவினம் | | சொத்துக்கள் | | வருமானம் | |
|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி |
| | | | | ரூபா | | ரூபா |
| நிதிக்கூற்றுக் களில் அதிகரித்துக் காட்டல்கள் | 01 | 18,008 | 03 | 358,556 | 02 | 1,312,234 |

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

**கணக்காய்விற்காக தகவல்களைச் சமர்ப்பிக்காமை**

தேவையான தகவல்கள் இன்மை காரணமாக மொத்தம் ரூபா 1,280,559 ஆன கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.3.3 இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள். விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள். விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இனங்கி ஓழுகாமைகள் |
|---|---|
| (i). பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) ஒழுங்குவிதிகள் - 1988 | |
| (அ) I ஆம் அத்தியாயத்தின் 05 ஆம் பிரிவு | காசு மற்றும் களஞ்சியத்தனைக் கையாழும் உத்தியொகத்தர்களிடமிருந்து பாதுகாப்பு பிணைமுறி பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) III ஆம் அத்தியாயத்தின் 66 ஆம் பிரிவு | வருமான நிலுவைகளை அறவிடுவதற்கு செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| (இ) III ஆம் அத்தியாயத்தின் 76 ஆம் பிரிவு | வாடகைகளை அறவிடுவதில் தாமதம் காணப்பட்டது. |
| (ஈ) III ஆம் அத்தியாயத்தின் 81 ஆம் பிரிவு | ஒவ்வொறு காலாண்டின் முடிவிலும் முத்திரைக் கட்டணங்களை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக் கவில்லை. |
| (உ) V ஆம் அத்தியாயத்தின் 140 ஆம் பிரிவு | ரூபா 295,489 முற்பணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) VI ஆம் அத்தியாயத்தின் 145 ஆம் பிரிவு | துணைப் பேரேடு மற்றும் பிரதான பேரேட்டுடன் வைப்புக்கள் பதிவேடு கணக்கிணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஐ) | VII ஆம் அத்தியாயத்தின் 166 ஆம் பிரிவு | பிரதான பேரேட்டில் பதிவினை மேற்கொள்வதற்கு முன்னர் குறிப்புப் புத்தகம் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஒ) | IV ஆம் அத்தியாயத்தின் 169 ஆம் பிரிவு | வேலைகளுடன் தொடர்புட்ட பீஎஸ் 40, பீஎஸ் 41 மற்றும் பீஎஸ் 42 பதிவேடுகள் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரினால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஓ) | VIII ஆம் அத்தியாயத்தின் 178(7) ஆம் பிரிவு | ரூபா 100,000 இற்கு மேற்பட்ட வேலைகளிற்கான கேள்விப்பத்திர நடைமுறைக்காக 02 பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | வட மாகாண நிதிப்பிரமாணம் இல. 237(iv) | 06 மாதாங்களிற்கு மேல் காசாக்கப்படாத ரூபா 8,000 தொகையான காசோலை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 437 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | நான்கு அரசாங்க வாகனங்கள் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடம் காப்புறுதி செய்யப்படாது தனியார் காப்புறுதிக் கம்பனியொன்றில் ரூபா 5,694 இற்கு காப்புறுதி செய்யப்பட்டிருந்தன. |
| (iv) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம்<br>132 (அ) ஆம் பிரிவு | ஆண்டொன்றில் ரூபா 1,000 இற்கு மேல் மத ரீதியான மற்றும் பொது வேலைகளிற்காக செலவிடுகையில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளாது ரூபா 37,285 ஆனதோர் தொகை உபசாரச் செலவினத்திற்காக செலுத்தப் பட்டிருந்தது. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமானம் ரூபா 1,327,877 ஆக இருந்ததுடன் இதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமானம் ரூபா 306,127 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம்

செயலாளரினால் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் என்பவை பற்றிய நிலைமைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2010 பாதிடப்பட்டவை | 2010 உள்ளபடியானவை | 2010 31 திசெம்பரில் திரண்ட நிலுவை | 2009 பாதிடப்பட்டவை | 2009 உள்ளபடியானவை | 2009 31 திசெம்பரில் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' |
| (i) வீதவரி | 143 | 123 | 1,603 | 78 | 86 | 1,581 |
| (ii) வாடகை | 1,736 | 1,929 | 867 | 769 | 1,061 | 867 |
| (iii) அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 441 | 637 | - | 594 | 333 | - |
| (iv) ஏனைய வருமானங்கள் | 16,753 | 19,194 | - | 684 | 369 | - |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப் பணம்

2010 ஆம் அண்டிற்காக சபைக்குக் கிடைக்கவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணங்களை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 முத்திரைக் கட்டணங்கள்

பதிவாளர் நாயகத்திடமிருந்து 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.3 செலவுக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாக சபையின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | **பாதீடு செய்யப்பட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** | **பாதீடு செய்யப்பட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** |
| | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' |
| ஆளுக்குரிய வேதனம் | 13,568 | 13,477 | 91 | 10,212 | 12,798 | (2,586) |
| ஏனையவைகள் | 3,383 | 2,587 | 796 | 2,039 | 1,639 | 397 |
| உப மொத்தம் | 16,951 | 16,064 | 887 | 12,251 | 14,437 | (2,189) |
| **மூலதனச் செலவு** | 2,116 | 4,028 | (1,912) | 3,678 | 438 | 3,240 |
| முழு மொத்தம் | **19,067** | **20,092** | **(1,025)** | **15,929** | **14,875** | **1,051** |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி**

2010 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கையும் பற்றிய தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| **பதவி வகை** | **அங்கீகரிக்கப்பட்டவை** | **உள்ளபடியானவை** |
|---|---|---|
| பதவியணித் தரம | 02 | 01 |
| இரண்டாம் மட்டம் | 13 | 14 |
| ஆரம்ப மட்டம் | 29 | 33 |
| ஏனையவர்கள் (சமயாசமயம்/தற்காலிகம்) | - | - |
| மொத்தம் | 44 | 48 |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 பெறவேண்டிய கணக்குகள்

வருமான நிலுவை ரூபா 2,448,543 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. தலைவரின் கருத்துப் படி மேற்படி தொகையானது யுத்தத்தினால் இடம் பெயர்ந்தோர்களிடம் அறவிடப்பட வேண்டியதாகும்.

### 2.5.2 அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்கள்

மரணித்த, சேவை இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து இரண்டு ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்படாதுள்ள ரூபா 173,940 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கவில்லை.

### 2.6 நோக்கத்திற்கு அப்பாற்பட்ட செயற்பாடுகள்

பின்வரும் செலவினங்கள் சபைக்கு சட்டத்தினால் ஒப்படைக்கப்பட்ட நோக்கத்திற்கு அப்பாற்பட்டதாக காணப்பட்டமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

i. வட மாகாண உள்ளூராட்சி அமைச்சினால் நடாத்தப்பட்ட சிப்போசியம் கண்காட்சிக்கு மாதிரி துறைமுகத்தினைத் தயாரிப்பதற்காக ரூபா 80,885 செலுத்தப்பட்டிருந்தது. இருந்த போதிலும் சபையின் நோக்கத்திற்கு முரணாக இக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ii. மன்னார் நிதவான் நீதிமன்றத்திற்கு சபை ரூபா 69,300 பெறுமதியான 06 கூறை காற்றாடிகளை பிரதேச சபை அன்பளிப்புச் செய்திருந்தது.

iii. சபையின் நோக்கத்திற்கு முரணாக எண்ணை விழாவிற்காக சபையினால் ரூபா 3,040 செலவிடப்பட்டிருந்தது.

iv. ஆளுனரின் நூலகப் புத்தகப் பகிர்ந்நதளிப்பு விருந்துபசாரச் செலவினமாக ரூபா 10,939 செலவிடப்பட்டிருந்தது.

### 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமானச் நிர்வாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) மனித வளம்

(ஊ) வாகனப் பாவனை